# ஒன்றியத்தில் மதச்சார்பற்ற ஆட்சி அமைப்போம்!

## மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

## பிரதமர் மோடியின் திட்டம் முறியடிக்கப்படும்!

நெருக்கடிநிலை நேரத்தில் நம்முடைய ஆட்சியைக் கலைத்து விட்டு 500-க்கும் மேற்பட்டவர்கள் தமிழ்நாடு முழுவதும் சிறைபிடிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், சென்னை சிறைச்சாலையில் நானும், நம்முடைய பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களும், மற்றவர்களும் அடைப்பட்டிருந்த போது, எங்களோடு இருந்தவர் தான் நம்முடைய வேணு அவர்கள்.

எனவே அப்படிப்பட்ட ஒரு தியாகச்சீலராக இருக்கும் வேணுவின் பேத்திக்கு இன்று மண விழா நிகழ்ச்சி.

**குடும்பம் குடும்பமாக - அரசியலை நடத்தி கொண்டுதானிருக்கிறோம்!**

இன்றைக்கு சிலர் - சிலர் என்று சொல்வதைவிட முக்கிய பொறுப்பில் இருக்கும் -பிரதமராக இருக்கும் மோடி அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு உரையை ஆற்றி இருக்கிறார். குடும்ப அரசியலை நாம் நடத்திக் கொண்டிருப்பதாக. உண்மை தான். இது குடும்ப அரசியல் தான். தி.மு.க. என்பது குடும்பம் குடும்பமாக இருக்கிறது. அதை அவர் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அத்தோடு நிறுத்தாமல், குடும்பம் குடும்பமாக அரசியலை நடத்திக் கொண்டு, அவர்கள் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள், வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தொனியில் பேசியிருக்கிறார்.

**அண்ணா - கலைஞர் காட்டிய உணர்வு!**

அறிஞர் அண்ணா அவர்கள் இந்த இயக்கத்தை தொடங்கிய நேரத்தில் நம்முடைய உடன்பிறப்புகளை - கழகத் தோழர்களை எல்லாம் “தம்பி... தம்பி...” என்றுதான் உரிமையோடு அழைத்தார்கள். அதைத்தொடர்ந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கழகத் தோழர்களை எல்லாம் - கழகத் தோழர்களை மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை உடன்பிறப்புகளையும் “உடன்பிறப்பே... உடன்பிறப்பே...” என்றுதான் - அது ஆண்களாக இருந்தாலும் - மகளிராக இருந்தாலும் - தங்கையாக இருந்தாலும் - அக்காவாக இருந்தாலும் - அண்ணனாக இருந்தாலும் - தம்பியாக இருந்தாலும் - யாராக இருந்தாலும் அத்தனை பேரையும் “உடன்பிறப்பே... உடன்பிறப்பே...” என்று ஒட்டுமொத்தமாக அழைத்து அந்த உணர்வை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். எனவே இது உள்ள படியே குடும்ப அரசியல் தான்.

திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளைப் பல்வேறு வகைகளில் - பல்வேறு மாவட்டங்களில் - பல்வேறு நேரங்களில் நாம் நடத்தி இருக்கிறோம். அந்தக் கழக மாநாடுகள் நடத்துகிறபோது மூன்று நாட்கள், நான்கு நாட்கள் என்றெல்லாம்கூட நடத்தியிருக்கிறோம். அப்படி மூன்று நாட்கள், நான்கு நாட்கள் நடத்தும் அந்த மாநாட்டிற்குக் குடும்பம் குடும்பமாக வாருங்கள் என்றுதான் தலைவர் கலைஞர் அவர்கள் அழைப்பார்கள். குடும்பம் குடும்பமாக வருவார்கள். அந்தப் பந்தலிலே உட்கார்ந்து உணவு அருந்துவார்கள். கைக்குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வந்து அந்த பந்தலிலேயே தொட்டில் கட்டி, அந்த தொட்டில் ஆட்டும் காட்சிகளை எல்லாம் தலைவர் பார்த்துப் பரவசம் அடைந்திருக்கிறார்கள்.

ஏதோ மாநாட்டிற்கு மட்டுமல்ல, போராட்டத்திற்குக்கூட குடும்பம் குடும்பமாக பங்கேற்று, சிறை சென்று பல கொடுமைகளை எல்லாம் அனுபவித்திருக்கிறோம். இது திராவிட இயக்கத்தில் இருக்கும் வழக்கம்.

**50 ஆண்டு காலத்தில் வளர்ச்சி அடைந்திருக்கும் தமிழகம்!**

ஆனால் இன்றைக்கு நாட்டின் பிரதமராக இருப்பவர் என்ன சொல்லுகிறார் என்று சொன்னால், தி.மு.க.விற்கு வாக்களித்தால், இதைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும். “தி.மு.க.விற்கு வாக்களித்தால் கருணாநிதியின் குடும்பம்தான் வளர்ச்சி அடையும்” என்று பேசியிருக்கிறார். ஆம், கருணாநிதியின் குடும்பம் என்பதே இந்த தமிழ்நாடுதான். தமிழர்கள்தான்.

50 ஆண்டு காலமாக திராவிட இயக்கம்தான் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த 50 ஆண்டு காலத்தில் தமிழகம் வளர்ச்சி அடைந்தி ருக்கும் அந்த நிலைகள் எல்லாம் பார்த்துவிட்டு, பிரதமர் அவர்கள் பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இந்த நவீன தமிழ்நாட்டை உருவாக்கியவர் யார் என்றால் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நூற்றாண்டு விழாவை அவருக்காக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பட்டியலை - சாதனைப் பட்டியலை போட்டால் நேரம் போதாது. அவ்வளவு பெரிய பட்டியல் இருக்கிறது.

அந்த வழியில்தான் இன்றைக்கு ஆறாவது முறையாக நம்முடைய ஆட்சி - ‘திராவிட மாடல் ஆட்சி’யாக தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று நாம் நம்முடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**மிசாவில் சிறைபட்ட அனைவரையும் மகன்களாகக் கருதியவர் கலைஞர்!**

குடும்பம்... குடும்பம்... என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்பு வது, ஒரு வருடம் மிசாவில் அடைக்கப்பட்டு சிறையில் இருந்த நேரத்தில், அந்தச் சிறையில் இருக்கும் தோழர்களை எல்லாம் அந்தக் குடும்பத்தைச் சார்ந்திருக்கும் உறவினர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் வந்து முறையாக சந்திப்பது வழக்கம். ஆனால் சென்னை சிறைச்சாலையை பொறுத்தவரை இரண்டு மாத காலம் அதற்கு அனுமதி தரவில்லை. ஆனால் அனுமதி உண்டு. நியாயமாக சட்டப்படி அனுமதி தந்தாக வேண்டும். ஆனால் அனுமதி தரவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் அறிக்கை விட்டார்கள். “அனுமதி தரவில்லை என்று சொன்னால் சிறைவாசலில் சிறையில் இருப்பவர்களின் உறவினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம். என்னுடைய தலைமையில் நடைபெறும்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அதற்குப்பிறகு அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டு அனுமதி தந்தார்கள். முதல் அனுமதி யாருக்கு என்றால் எனக்குதான் கிடைத்தது. கலைஞர் வந்து பார்க்க வேண்டும். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் வர மாட்டேன் என்று சொல்லிவிட்டார். சிறையில் இருக்கும் அனைவரையும் பார்த்ததற்குப் பிறகுதான் என்னுடைய மகன் ஸ்டாலினை நான் பார்க்க வருவேன் என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், என்னை மட்டும் மகனாகக் கருதவில்லை அவர், சிறையில் இருக்கும் அத்தனை பேரையும் மகனாகக் கருதியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். எனவே குடும்ப அரசியல் என்று பொருத்தமாகத்தான் நம்முடைய பிரதமர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

**பிரதமர் மோடிக்கு ஏற்பட்டிருக்கும் அச்சம்!**

அவருக்கு இப்பொழுது ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 23-ஆம் தேதி பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள் பாட்னாவில் ஒரு கூட்டத்தை கூட்டினார். பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக இருக்கும் கட்சிகளை ஒன்று திரட்டி ஒரு தேர்தல் வியூகத்தை அமைக்க வேண்டும். வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலை எந்த வியூகத்தோடு சந்திப்பது என்பதை பற்றி யோசிக்க, கலந்துபேசிட முதற்கட்டமாக, முதல் கூட்டமாக அந்த முயற்சி எடுத்து அந்தக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள்.

எனவே அதற்குப் பிறகு அவருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சம் தான், இன்றைக்கு பிரதமர் மோடி அவர்களே இறங்கி வந்து பேசும் சூழல் உருவாகி இருக்கிறது.

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் லட்சணம் இதுதான்!**

நான் கேட்கிற கேள்வி எல்லாம், மணிப்பூர் மாநிலம் - இன்றைக்கு மத்தியில் ஆட்சியில் இருக்கும் பி.ஜே.பி. ஆளுகிற மாநிலம். அந்த மணிப்பூர் மாநிலம் கடந்த 50 நாட்களாக எரிந்து கொண்டிருக்கிறது. 150 பேர் இதுவரை பலியாகியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் அந்த மாநிலத்தை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். இதுவரை பிரதமர் அந்தப் பக்கமே போகவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட 50 நாட்களுக்குப் பிறகுதான் அமித் ஷா அவர்கள் நடத்தி இருக்கிறார். இதுதான் ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. ஆட்சியின் லட்சணம்.

இந்த லட்சணத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லி இருக்கிறார். எனவே ஒரு நாட்டினுடைய சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்க வேண்டும். மதக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்கக் கூடாது என்கிறார் நம்முடைய மோடி அவர்கள். எனவே மதப் பிரச்சினையை அதிகம் ஆக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று அவர் கருதிக் கொண்டிருக்கிறார்.

நான் உறுதியோடு சொல்கிறேன், நிச்சயமாக உறுதியாக வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சிக்கு சரியான பாடத்தை மக்கள் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயாராகி விட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் இருக்கும் மக்களை உங்கள் மூலமாக, இந்த திருமண நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, நீங்களும் தயாராக இருக்க வேண்டும், உறுதியோடு இருக்க வேண்டும்.

**ஒன்றியத்தில் மதச்சார்பற்ற ஆட்சி உருவாவது உறுதி!**

இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஆளுகிற உங்கள் ஆட்சி - திராவிட மாடல் ஆட்சி, தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை எடுத்துச் சொல்லி ஆட்சிக்கு வந்திருக்கிறோமோ, அந்த உறுதிமொழிகளை எல்லாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனவே இது தொடர, எப்படி தமிழ்நாட்டில் ஒன்று சேர்ந்து, நம்முடைய ஆட்சியை உருவாக்குவதற்கு காரணமாக இருந்தீர்களோ, அதேபோல் ஒன்றியத்தில் ஒரு சிறப்பான ஆட்சி - மதச்சார்பற்ற ஒரு ஆட்சி - நமக்காகப் பாடுபடும் ஒரு ஆட்சி - மாநில உரிமைகளை அந்தந்த மாநிலங்களுக்கு வழங்கும் நிலையில் நடைபெறும் ஆட்சி உருவாகுவதற்கு நீங்கள் எல்லாம் தயாராக வேண்டும்... தயாராக வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்கள் அத்தனை பேரையும் கேட்டுக் கொண்டு, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை வாழ்த்துகிற அதேநேரத்தில், நான் மணமக்களை அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். தமிழர் என்ற அந்த உணர்வை வெளிப்படுத்துங்கள் என்று இந்த நேரத்தில் மணமக்களை கேட்டுக்கொண்டு, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### அமைச்சரவையிலிருந்து செந்தில் பாலாஜி நீக்கம்:

## ஆளுநரின் உத்தரவு 5 மணி நேரத்தில் நிறுத்திவைப்பு!

### ஒன்றிய உள்துறை அமைச்சகம் அதிரடி நடவடிக்கை!

**புதுடெல்லி, ஜூன் 30–**

**அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து நீக்கிய ஆளுநரின் உத்தரவு ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி 5 மணி நேரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.**

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து நீக்கி தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி இரவு 7 மணியளவில் உத்தரவிட்ட செய்தி வெளியாகியது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்ட வல்லுநர்கள், கட்சித்தலைவர்கள், ஆளுநரின் உத்தரவுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதனிடையே நள்ளிரவு 12 மணியளவில் ஆளுநரின் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து நீக்கிய உத்தரவு நிறுத்திவைக்கப்படுவதாகவும், அட்டார்னி ஜெனரலின் கருத்தை கேட்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆளுநர் கடிதம் எழுதியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளுநரின் உத்தரவு 5 மணி நேரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டம் பெங்களூருவுக்கு மாற்றம்!

### ஜூலை 13, 14ல் நடக்கிறது!

*மும்பை, ஜூன் 30-*

ஹிமாச்சல பிரதேச மாநிலம் ஷிம்லாவில் நடைபெறவிருந்த எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டம், அதற்கு பதில் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் வரும் ஜூலை 13 மற்றும் 14ல் நடைபெறும் என தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத் பவார் கூறியுள்ளார்.

ஆளும் பா.ஜ.க.விற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளையும் திரட்டி, ஆளும் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது என்று முடிவு செய்து இதற்காக கடந்த 23-ஆம் தேதி பாட்னாவில் எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டம் நடந்தது.

அதில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, ராகுல், முதல்வர் மு.க.ஸ்டாலின், பீஹார் முதல்வர் நிதிஷ்குமார், லாலு பிரசாத் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின் முடிவில், அடுத்த கூட்டம் ஹிமாச்சல பிரதேசம் மாநிலம் சிம்லாவில் நடக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் கூறியதாவது:

பாட்னாவில் எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டத்தினால், பிரதமர் மோடி அமைதியற்று காணப்படுகிறார்.

எதிர்க்கட்சி தலைவர்களின் அடுத்த கூட்டம் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் வரும் ஜூலை 13 மற்றும் 14-ல் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கூட்டம் மாற்றப்பட்டு உள்ளதாக தெரிகிறது.

---



வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வரட்டுக்கரைப் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் ஓலப்பாளையம் முதல் மொட்டக்காடு வரையிலும், மேட்டுக்காட்டுவலசு முதல் வரட்டுக்கரை வரையிலும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்டத் துணைச் செயலாளர் ராசி முத்துக்குமார், வெள்ளக்கோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகர், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், பேரூர்க் கழகச் செயலாளர் செண்பகம் பாலு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.கே.ரவிச் சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.